இருப்பது அவர்களுக்கு வழங்கி வருகிற மானியம் ஒதுக்குவதற்காகத்தான். ஜாதி அடிப்படையில் இல்லாமல் அவர்களுடைய ஏழ்மை அடிப்படையில் மான்யம் வழங்கும் முறையை ஏற்படுத்தினால், ஜாதியைக் குறிப்பிடவேண்டிய அவசியமே வராது. இந்த விஷயத்தை அரசாங்கம் கவனித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விஷயமும் சேர்த்து கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that by deleting caste reference, it is possible to establish a casteless society in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know whether it is possible to establish a casteless society by simply deleting caste designation. It depends upon the attitude of the people and we find that that attitude is slowly changing so that it may be possible to have a casteless society.

SRI S. RANGANATHA MUDALIYAR : Sir, so long as there is distinction between upper classes and backward classes, and forward classes and scheduled castes, these divisions will be there and therefore will it not be in the interest of all those people to retain the caste names?

THE HON. SRI C. SUBRAMANIAM : The policy of the Government is to help the backward classes who are socially, economically and educationally backward. Whether for that purpose, caste designation is necessary is a matter that will have to be fully examined. That is why we are unable to take a decision on that point.

SRI N. MARUDACHALAM : ஸ்காலர்ஷிப் பாரத்தில் ஜாதி குறிப்பிடப்படும்பொழுது, 'இன்' வந்தால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் உண்டு, 'இர்' வந்தால் அவர்கள் உயர் ஜாதியை சேர்ந்தவர்களாகிவிடுகிறார்கள் என்று . . . . .

MR. SPEAKER : It is not a question.

Highway robbery in Tiruvannamalai-Kanchee road

* 388 Q.—SRI P. U. SHANMUGAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-காஞ்சி பாதையில் 1960-ம் ஆண்டு ஜூன் மீ 23 உ இரவு வழிப்பறிக் கொள்ளை நடைபெற்றதாகப் போலீசாருக்குப் புகார் வந்ததா?

(ஆ) கொள்ளைக்காரர்கள் கண்டுபிடிக்கப்பட்டார்களா?

23rd August 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) There was no such complaint regarding an occurrence on 23rd June 1960. But a case of dacoity occurred on 24th June 1960 on the Tiruvannamalai-Kanchee road and this has been registered and is being investigated.

(b) The dacoits have not yet been apprehended.

SRI P. U. SHANMUGAM: பகற்கொள்ளை கொடுத்துவிட்டு அவர்கள் போலீஸில் புகார் செய்தபொழுது போலீஸார் விரட்டி அடித்தார்கள் என்பது உண்மைதானா? மேற்கொண்டு பல கொள்ளைகள் நடந்து, போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்தபொழுது போலீஸார் விரட்டி அடித்தார்கள் என்பதும் உண்மையா? இது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் வேலூர் சென்றிருந்தபொழுது திருவண்ணாமலையிலிருந்துகூட வந்து என்னைப் பார்த்தார்கள். போலீஸார் ஒன்றும் விரட்டி அடிக்கவில்லை. ஒரு போலீஸ் ஆபிஸர் 'இத்தனை பேர்கள், 21 பேர்கள் இருந்தும் எப்படி விட்டுவிட்டீர்கள்' என்று கேட்டாராம். அதனால் பரிசீலனை ஒன்றும் தடைபடவில்லை. பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு டி.எஸ்.பி. அவர்கள்கூட 'சில பேர்கள் அகப்பட்டுக்கொண்டார்கள்' என்று சொன்னார்கள்.

Preservation of mango fruits

*389 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரை ஜில்லா, பெரிய குளத்தில் மாம்பழங்களை சீஸன் காலம் முடிந்த பின்னும், உபயோகத்தில் வைத்திருக்க குளிர் பதன அறை (கோல்ட் ஸ்டோரேஜ்) கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

THE HON SRI M. BHAKTAVATSALAM: There are no proposals under contemplation at present to set up any cold storage unit for fruit preservation in this State.

Election for the Legislative Council from Graduates' Constituency

*390 Q.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) பல்கலைக் கழகத்தினிடமிருந்தாவது மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையங்களிடமிருந்தாவது மொழிகளிலும் அல்லது சங்கீதத்திலும் பட்டம் பெற்றவர்களுக்கு, மேல் சபைப் பட்டதாரிகள் தொகுதிக்கு வோட்டுரிமை உண்டா?

(ஆ) இல்லையானால், அதற்கான காரணம் என்ன?